


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 4 மே 2004 கனி 6

ஆண்டு சந்தா Rs.50/-

ஆசிரியர்
B. அர்ஜுனன்



பதினொன்றாவது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்ட தேவஜனங்கள்

வாசகர்கள் எங்களோடு கடித தொடர்பு கொள்ளும்போதும், மணியாடர் அனுப்பும்போதும் தயவுசெய்து உங்களுடைய **Ref.No.** யை மறக்காமல் எழுதவும்

## சபையைக் கட்ட ஒரு வழிகாட்டி

## A Guide to Build the church

நேகேமியா புஸ்தகத்தில் எருசலேமின் அலங்கங்கள் திரும்ப கட்டப்படுவதில் இஸ்ரவேல் ஜனங்களின் வேலையைப் பற்றி வாசிக்கிறோம். இன்று கர்த்தருடைய சபையை வெற்றிகரமாகக் கட்டும் பணியில் நாம் நியமிக்கப்பட்டவர்களாயிருப்போமானால் அவர்களுடைய வழிகாட்டுதல் நமக்கு உதவிசெய்யும். தயவு செய்து அவர்களுடைய வேலைய்யை கவனியுங்கள்.

✓ அவர்கள் ஜெபித்தார்கள்


✓ அவர்கள் தங்கள் வேலையைத் திட்டமிட்டார்கள்

✓ அவர்கள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தினார்கள்

✓ அவர்கள் குறைகூறுவதை அசட்டை செய்தார்கள்

✓ அவர்கள் ஒவ்வொருவரும் வேலையில் தங்களை இணைத்துக்கொண்டார்கள்

✓ அவர்களுக்காக தேவன் யுத்தம் செய்து அவர்களோடிருந்தார் என்பதை நினைவுகூர்ந்தார்கள் . -selected



"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 4 மே - 2004 கனி - 6


ஆசிரியருரை

## சமாதானம் Peace



இன்றைக்கு சமாதானமில்லாமல் சமாதானத்தைத் தேடி மனிதன் அங்கும் இங்கும் அலைகிறான். பலருக்கு வசதி வாய்ப்புகள் இருந்தும் சமாதானமில்லை. சிலருக்கு வசதிவாய்ப்புகள் இல்லாமலிருந்தும் சமாதானமில்லை. ஆக சமாதானம் யாவருக்கும் தேவையான ஒன்றாயிருக்கிறது. சமாதானம் என்பது வாங்கக் கூடிய ஒரு பொருளல்ல அது விற்பனைக்காக எங்கும் வைக்கப்படவுமில்லை. இதைப் பெற்றுக் கொள்ள சமாதானக்காரரை நாட வேண்டும். யார் அந்த சமாதானக்காரர்? அவர் தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவர். "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப் படும்"(ஏசா.9:6). இந்த சமாதானப்பிரபு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. இவர் ஒருவராலே மனிதனுக்கு சமாதானத்தைக் கொடுக்கமுடியும்.

அவர் பிறப்பின்போது "அந்க்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்"(லூக்.2:13,14). அன்றே பூமிக்கு சமாதானகர்த்தரை முன்வைத்து சமாதான வார்த்தைகளை தேவன் தம்முடைய பரமசேனையின் திரள் மூலம் பொழிந்தருளினார். அவருடைய பிறப்பு உலகத்திற்கு சமாதானத்தைக் கொண்டுவந்தது. தொடர்ந்து

இயேசுவும் தம்முடைய சீஷர்களோடு சமாதானத்திற்குரிய சுவிசேஷத்தை பிரசங்கித்துக்கொண்டுவந்தார். மரணத்திற்கு பின்பும் கூட தம்முடைய சீஷர்களைப் பார்க்கும்போது உங்களுக்குச் சமாதானம் என்றார்.

அவருடைய ஊழியநாட்களில் தம்முடைய சீஷர்களைப் பார்த்து: "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக"(யோவா.14:27)என்றார். உலகத்தார் தம் ஜனங்களுக்கு விட்டுசெல்வது அவர்களது ஆஸ்திகளையே! கர்த்தரோ தம் ஜனங்களுக்கு விட்டு சென்றது எருசலேமில் உள்ள அரண்மனைகளையோ அல்லது அங்குள்ள அசையா சொத்துக்களையோ அல்ல சமாதானத்தையே விட்டு சென்றார். அவர் ஒருபோதும் உலகப்பிரகாரமான காரியத்தை தம்முடைய சீஷர்களுக்கு வாக்குப்பண்ண வில்லை. இன்று நாட்டிலும், வீட்டிலும், சமுதாயத்திலும், ஸ்தாபனத்திலும், தனிப்பட்ட விதத்திலும் சமாதானமில்லை. இதற்கு என்ன காரணம்? உலகப்பிரகாரமான காரியத்தை மையமாக வைத்து மனிதன் போட்டி போட்டுக்கொண்டு செயல்படுவதால் சமாதானம் அற்றுப்போகிறது. இதனால் என்ன பயன்? இதன் முடிவுதான் என்ன? என்று நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் அழிவுதான் மிஞ்சும். சமாதானம் இல்லாததினாலே சண்டைகளும், பிரிவினைகளும், ஏமாற்றங்களும், தற்கொலைகளும், வன்முறைகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. இப்படியே போகுமானால் மனிதனுடைய நிலை மிகமோசமாக மாறிவிடும்.

தேவன் இதற்காகவா மனிதனைப் படைத்தார்? அவன் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் இருக்கவே சிருஷ்டிக்கப்பட்டான். பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது "சமாதானமாயிருக்கும் படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்"(1கொரி.7:15) என்கிறார். ஆனால் பல குடும்பங்கள் சமாதானக் குறைவோடு வாழ்கிறதை நாம் காணமுடிகிறது. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் எப்போது பார்த்தாலும் சண்டையும் சத்தமுமாக காணப்படும். இதற்கு மூலகாரணமாயிருப்பது அவிசுவாசம்தான். இந்த அவிசுவாசத்தைக் களைந்து போட்டு கர்த்தரில் விசுவாசம் கொள்ளும்போது அவர் விட்டு சென்ற சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு "தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்குச் சமனான பாதை; தன் நடையைக் கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்"(நீதி.16:17) என்ற வசனத்தின் படி உங்களுடைய நடையைக் கவனித்து உங்களுடைய ஆத்துமாவைக் காக்க முற்படுங்கள்.

பலருக்கு தீமையை விட்டு விலகுவது என்பது முடியாத ஒன்றாகவும் அது கசப்பான கீரையைப்போலவும் இருக்கும். ஒரு புற்று நோயாளி மருத்துவரை சந்திக்கும்போது மருத்துவர் கொடுக்கும் ஆலோசனை என்னவாயிருக்கும்? ஐயா வெற்றிலை பாக்கு எல்லாம் போடுவீர்கள் போல் தெரிகிறதே இதெல்லாம் போட்டால் வாய் புற்றுநோய் சுகமாகாது என்பார்.

ஆனால் நோயாளியோ! சார் என்னால் வெற்றிலை பாக்கு எல்லாம் போடாம் இருக்கமுடியாது வேறுமாற்று மருந்து இருந்தா சொல்லுங்க என்பார். இதைப்போல் இன்று பலருக்கு தீமையை விட்டு விலதுவது என்பது முடியாத ஒன்றாகவே இருக்கிறது. ஆத்துமா காக்கப்பட வேண்டுமானால் தீமையை களைந்தே ஆகவேண்டும். மேற்பூச்சாய் குணமாக்கும் போதகர்கள் இன்றைய நாட்களில் பெருகியிருக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் உரைக்கும்போது "சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்"(எரே.6:14)என்றார். ஆம், கடிந்து கொண்டு கண்டனம் பண்ணி புத்திசொல்லாத ஊழியர்கள் ஆசீர்வாதத்தை பெற அலைந்து தோடும் மக்களை சந்தித்து அவர்களை மேற்பூச்சாய் குணமாக்குகிறார்கள். உள்ளேயோ புரை ஓடிக்கொண்டிருக்கும். கடிந்து கொண்டு போதிக்கும் ஊழியர்களை ஏற்றுக்கொள்ளாத புரை ஓடின ஜனங்கள் மேற்பூச்சாய் குணமாக்கும் வைத்தியர்களையே நாடுகிறார்கள். "ஜீவனுக்கேதுவான கடிந்துகொள்ளளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும்" (நீதி.15:32). கடிந்து கொள்ளுதல் என்பது ஜீவனுக்கேதுவானது. நமது ஆண்டவரும் கடிந்து கொண்டே போதித்தார். பரிசேயரையும் வேத பாரகரையும் பார்த்து உங்களுக்கு ஐயோ, "மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப்போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை"(மத்.23:13) என்றார்.

சமாதானத்தை கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன"(ஏசா.52:7). இப்படி அழகாக வர்ணிக்கப் பட்ட சுவிசேஷகன் எப்படிப்பட்டவனாயிருக்கவேண்டும்? அவன் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவனாயிருந்து, அவன் செல்லுகிற குடும்பத்தில் சமாதான கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்க வேண்டும். அப்பொழுது அந்த குடும்பத்திற்குச் சமாதானம் வரும். அநேக குடும்பங்களில் சமாதானமில்லாமல் தங்களை தாங்களே மாய்த்துக்கொள்கிறார்கள். "சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே.18:32). தற்கொலை ஒரு கோழைத்தனமான செயல். மனிதன் வாழ படைக்கப்பட்டவன். கொடைக்கானலுக்கு சுற்றுலா பயணியாக வருகிறவர்களில் சிலர் தேவனால் படைக்கப்பட்ட சகல இயற்கை காட்சிகளைக் கண்டு மகிழ்ச்சியுற்று பின்பு தங்களுடைய வாழ்க்கையின் தோல்வியை நினைத்து தற்கொலைபாறை சென்று குதித்து தற்கொலை செய்து கொள்கின்றனர். மனிதன் தன்னைத்தான் அழித்துக் கொள்வதை தேவன் விரும்பவில்லை. மனிதன் ஏன் சாகவேண்டும்? அப்படி என்னதான் நடந்தது? யார் கைவிட்டாலும் நான் உன்னை

கைவிடுவதில்லை என்று வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் நம்மோடு இருக்கும்போது நாம் ஏன் கலங்கவேண்டும்? "நான் சாவாமல்; பிழைத்திருந்து கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்" (சங்.118:17) என தீர்மானிக்க வேண்டாமா?

ஆவியின் கனிகளில் ஒன்று சமாதானம். ஒவ்வொரு தேவமனிதனும் ஆவிக்குரிய கனிகள் நிறைந்தவனாக காணப்படவேண்டும். தனக்கானவை களையல்ல பிறருக்கானவைகளை நோக்குவானாக என்ற வசனப்படி மற்றவர்களை சமாதானப்படுத்த முயற்சிக்கவேண்டும். "நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்" (எபே.2:10). ஒவ்வொரு கிறிஸ்தவனும் சமாதானம் பண்ணுகிறவனாய் இருக்கவேண்டும். "நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" (யாக்.3:18) என்று தெளிவாக யாக்கோபு கூறுகிறார். சமாதானத்தைக் கூறுகிறவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் எப்படியிருக்கும்? அநேக திருச்சபைகள் இப்படித்தான் இருக்கின்றன. இச்சபைகள் எப்படி சமாதானத்தைக் கூற முடியும்? இதனாலே இச்சபையை சேர்ந்தவர்கள் ஆபாசபடமெடுப்பவர்களாகவும், கொலைகாரர்களாகவும், திருடுகிறவர்களாகவும் இருந்து கொண்டு மென்மேலும் திருச்சபைக்கு கெட்டபெயரை உண்டாக்குகிறார்கள் இவர்கள் நிமித்தமே சத்திய மார்க்கம் தூஷிக்கப்படுகிறது. இவர்கள் கர்த்தரின் நாமத்தை தரித்துக்கொண்டு இருக்கிறார்களே தவிர கர்த்தர் இவர்களை இரட்சிக்கவும் இல்லை தம்முடைய சபையில் இவர்களை சேர்க்கவும் இல்லை. சமாதானத்தை நடப்பிக்கிற தம்முடைய சபையின் மூலமே கர்த்தர் கிரியை செய்து வருகிறார்.


ஆபிரகாமைப்பார்த்து கர்த்தர் "நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல முதிர்வயதிலே அடக்கம் பண்ணப் படுவாய்" (ஆதி15:15) என்றார். இவ்விதமான மரணத்தை யாவரும் விரும்புவார்கள். நல்லதுதான்! அதே வேளையில் ஆபிரகாமுடைய விசுவாசத்தை நாம் பற்றிக்கொள்வோமானால் சமாதானத்தோடே மரிக்கும் பாக்கியத்தையும் பெறுவோம். "அவர் உன் எல்லைகளை சமாதான முள்ளவைகளாக்கி, உச்சிதமான கோதுமையினால் உன்னை திருப்தியாக்குகிறார்" (சங்.147:14). நாமோ அவர் செய்த நன்மைகளை மறந்தோம். இனியாவது கர்த்தர் செய்த நன்மைகளை நினைவுகூருவோம். "அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங் களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" (பிலி.4:7). சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக! ஆமென்.

***"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை" (சங்.119:165)***

# கர்த்தருடைய பந்தியில் யார் பங்குகொள்ளமுடியும்

# W HO CAN PARTAKE OF THE LORD`S SUPPER

J.C.Choate



கர்த்தருடைய திருவிருந்து தம்முடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்பாக கிறிஸ்துவால் ஆரம்பிக்கப்பட்டது (மத்.26:26-28). அவர் அப்பம் தம்முடைய சரீரத்தைக் குறிக்கும் என்றும் பாத்திரம் அல்லது திராட்சபழரசம் தம்முடைய இரத்தத்தில் பங்கு கொள்ளுகிறவர்களை நினைவுறுத்துகிறதாக இருக்கும் என்றும் கூறினார். மேலும் அவர் தாம் பிதாவின் ராஜ்யம் அல்லது சபையில் தம்முடைய சீஷர்களோடு கூட பானம்பண்ணும் நாள்வரைக்கும் இந்த பானம் பண்ணுவதில்லை என்றும் சொன்னார்.

நினைவுகூருதலாகிய இந்த பந்தியில் யார் பங்குகொள்ளுவார்கள்? கிறிஸ்துவின் சீஷர்கள், கிறிஸ்தவர்கள், தம்முடைய ராஜ்யத்தின் அதாவது சபையின், குடும்பத்தின் அங்கத்தினர்கள் (அப்.2:38,47). வாரத்தின் முதல் நாளிலே,.... ஞாயிற்று கிழமையிலே, கர்த்தருடைய நாளிலே நாம் கூடி வருகிற வேளையில் ....நாம் கிறிஸ்தவர்கள் யார்? கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் யார்? என அறிந்துகொள்ளலாம்.

நிச்சயமாக ஒரு பிராந்திய சபையில் அதிக அங்கத்தினர்கள் இல்லாதிருந்தால், சபை அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் அறிந்திருப்பார்கள். ஆனால் உள்ளூர் பார்வையாளர்கள் மற்றும் குறிப்பாக மற்ற நகரங்களிலும் நாடுகளிலுமிருந்து வருகின்றவர்கள் அங்கு கூடிவரும் போது அவர்களைக் குறித்த காரியம் என்ன? பிராந்திய அங்கத்தினர்கள் அவர்களை சந்திப்பதற்கும் அவர்கள் அங்கத்தினர்களா அல்லது அங்கத்தினர் அல்லாதவரா என்பது பற்றி அறிந்து கொள்வதற்கும் நல்ல வாய்ப்பு கிட்டவில்லையென்றால் என்ன செய்வது? அறியப்படாத விருந்தாளிகள் புறக்கணிக்கப்படுகையில் அங்கத்தினர்களென கண்டறியப் பட்டவர்களுக்கு மட்டும் திருவிருந்து பரிமாறப்படுமா அல்லது பங்கு கொள்ளும்படிக்கு எல்லாருக்கும் நல்ல வாய்ப்பளிக்கப்படுமா?

சபை அங்கத்தினர்கள் மட்டுமே திருவிருந்தில் பங்கெடுக்க அனுமதிக்கப்படவேண்டும் என சிலர் எண்ணுகின்றனர். இந்த வழக்கம் "நெருக்கமான ஐக்கியம்" ஆக ஒப்பிடப்படுகிறது, அதாவது கர்த்தருடைய திருவிருந்தில் பங்குகொள்ளுதல் அந்நியர்களுக்கு அடைக்கப்பட்டதா யிருக்கிறது. அறியப்பட்ட சபை அங்கத்தினர்கள் மட்டும் இதில் பங்கு கொள்ளலாம் ஆனால் நெருக்கமான ஐக்கியம் பயிற்சிக்கப்படும் போது, சில சபை அங்கத்தினர்கள் கூட வெறுமனே ஆராதனையில் கலந்து கொண்டு திருவிருந்தில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் புறக்கணிக்கப்படலாம்.

ஏனென்றால் சபை ஊழியம் செய்பவருக்கு அவர்கள் அறிமுகமாகாதவரா யிருக்கின்றார்கள். திருவிருந்தானது கர்த்தருடைய சபையில் அங்கத்தினராயிருப்பவர்களுக்கு மட்டுமே பரிமாறப்பட வேண்டியது என்பது உண்மையாகும். ஆனால் கிறிஸ்தவரல்லாதவர்கள் புசித்தால் என்ன செய்வது? இக்கேள்விக்கு விடையாக நான் இவ்வினா எழுப்புகிறேன்: திருவிருந்தில் பங்குகொள்ளும் தகுதியுடையவர் யார் என நியாயந்தீர்க்கும் அதிகாரத்தை மனிதருக்கு யார் கொடுத்திருக்கிறார்? நிச்சயமாக, ஒருவன் சபை அங்கத்தினனாக இல்லாவிட்டால் அல்லது அவிசுவாசமுள்ள அங்கத்தினனாக இருந்தால் அவன் இதில் பங்குகொள்ளக்கூடாது என நாம் அறிவோம்; ஆனால், திருவிருந்தினை புசிக்க விருப்பமுள்ள ஒருவனுக்கு பரிமாற மறுப்பதற்கு நாம் யார்? இவைகள் சம்பந்தமாக நாம் விசுவாசமிக்க கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும் எனக்கருதினால், நாம் அவர்களுடைய இருதயங்களை அறியமுடியாது. நம்முடைய அறிவுக்கு எட்டாமல், சிலர் தங்களுடைய வாழ்வில் ஒழுக்கமற்றவர்களாகவும், கடன்களை அடைக்கத் தவறியவர்களாகவும், தங்களுடைய இருதயத்தில் பாவம் நிறைந்த மனநிலையை உடையவர்களாகவும், குடும்ப தவறுகளினாலும் அல்லது நாம் அறியாத மற்ற காரியங்களில் நிலைத்திருப்பதினால் வேத வாக்கியங்களின் படி கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளாத நிலையில் இருக்கலாம். ஒரு மனுஷனும் மற்ற மனுஷனுடைய இருதயத்தை நியாயந்தீர்க்கமுடியாது.

இக்கேள்விகள் அனைத்திற்கும் பதில் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, பவுல் சொன்ன வார்த்தைக்கு செவி சாய்க்கவேண்டும், "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக்குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்புவரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" (1கொரி.11:27-29). நாம் கேள்விப்படுகின்ற இக்கூற்றானது ஒரு மிகப்பெரிய விதி என நான் நினைக்கிறேன்: அதாவது தனிப்பட்ட ஒருவனை சோதிப்பது நமக்குரியதல்ல, ஆனால் அந்த தனிப்பட்ட ஒருவன் தான் பாத்திரவானா அல்லது அபாத்திரவானா என்பதைக்குறித்து வேதவாக்கியம் போதிக்கிறபடி தன்னைத்தானே சோதித்தறிய வேண்டும். நம்முடைய வேலை போதிக்க வேண்டியதே அதன்பின் ஒவ்வொருவனும் அவனுக்குள் அல்லது அவளுக்குள் கர்த்தருடைய திருவிருந்தில் அவர்கள் பங்குகொள்ளலாமா என்பது பற்றி தீர்மானித்துக் கொள்ளட்டும். ஒருவனை திருவிருந்தில் பங்குகொள்ளாதபடி நாம் தடுப்போமானால் அவர்கள் புண்படுத்தப்பட்டு மேற்கொண்டு சொல்லப்படும் போதனைக்கு செவிசாய்க்க மறுத்துவிடுவார்கள். அவர்கள் அவிசுவாச அங்கத்தினராயினும் அல்லது அங்கத்தினரல்லாதவரா

யினும் அதில் பங்குகொள்வார்களானால், அவர்கள் இதுகுறித்து தொடர்ந்து போதிக்கப்பட்டு அதன்பிறகு கடைசியாக அவர்கள் சத்தியத்தைக் குறித்த அறிவை அடைந்து தங்களுடைய நிலையை சரிசெய்து கொள்ளுவார்கள். ஒருவன் விசுவாசமில்லாத அங்கத்தினராயிருந்து கர்த்தருடைய திருவிருந்தில் பங்குகொண்டு வந்தால், நாம் பொறுப்புடையவர்களா யிருக்கிறோம். நாம் அந்த தனிப்பட்ட நபரிடம் சென்று, அன்பின் வழியில் அவனை (அல்லது அவ்வளை) தன்னுடைய வாழ்விலுள்ள பாவத்தைச் சரிசெய்து அதன்பிறகே ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக தகுதியான முறையில் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ள வேண்டுமென ஊக்கப் படுத்தவேண்டும். அத்தோடுகூட, ஒருவன் கர்த்தருடைய சபையில் அங்கத்தினனாக மாறுவதற்கு ஒருபோதும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத வனாக இருந்தாலும்கூட, அவன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொண்டு வருகின்ற அந்த நபரை நாம் அறிந்திருந்தால், இது நாம் அந்த நபரிடம் சென்று, அவனோடு ஒரு வேதவகுப்பினை ஒழுங்குப்படுத்துவதற்கு நமக்கு ஒரு நல்ல வாய்ப்பினைத் தருகிறது. ஒருவேளை சேர்ந்து வேதத்தைக் கற்றுக்கொள்ளுவதின் மூலம் அவன் அல்லது அவள் கர்த்தருடைய பந்தியில் புசிப்பதற்கு கர்த்தர் திட்டமிட்டிருக்கிற நோக்கம் முழுவதையும் கற்றுக்கொள்ளமுடியும்.

பவுல் ஒருவன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுவதற்கு முன் தன்னைத் தான் சோதித்தறிய வேண்டுமென சொல்லியபோது, அவன் மற்ற எவரைக்காட்டிலும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படு கிறவர்களுக்கே ஒருவேளை அறிவுறுத்தினார் என்று நாம் இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும் என நான் கருதுகிறேன். ஒருவரும் நம்முடைய இருதயத்தின் கிரியைகளை அறியமுடியாது. தேவனுக்கு முன்பாக ஒரு உத்தமமான சோதித்தறிதலை உருவாக்குவதும் எதுவெல்லாம் தவறான தாயிருக்கிறது என நாம் கண்டு சரிசெய்வதும் நம்முடைய கடமையாயிருக்கிறது.

கர்த்தருடைய பந்தி ஒவ்வொரு வாரமும் கிறிஸ்துவினுடைய மாபெரும் தியாகபலிக்கு நம்முடைய ஒப்புக்கொடுத்தலை புதிப்பித்துக் கொள்வதற்கும் நாம் உண்மையாகவே கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்கிறோமா அல்லது இல்லையா என் அறிந்து கொள்வதற்கும் நமக்கு நல்லவாய்ப்பளிக் கிறது. நாம் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுவதற்கு (யோவா. 4:24) நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இல்லையென்றால், நாம் ஒவ்வொரு வாரமும் தேவையான சீர்திருத்தலை உருவாக்கும்படிக்கு ஒரு நல்ல வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம்.

நீங்கள் கிறிஸ்தவரா? ஒவ்வொருவாரமும் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுகிறீர்களா? அவற்றினால் நீங்கள் பெலனடைந்திருக் கிறீர்களா? இவ்வழியில் கர்த்தரை நினைவுகூருவதன் மூலம் அவரை மகிமைப்படுத்துகிறீர்களா?

# பாடுபடும் கிறிஸ்தவர்கள்

*சகோ.P.R.சாமி*

எபிரேயருக்கு எழுதின ஆசிரியர் எபி.12:4-ல் "பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே" என்கிறார். விசுவாச வீரர்கள் தங்கள் விசுவாசத்திற்காக எப்படி தங்கள் பிராணனை ஒப்பு கொடுத்தார்களோ, அப்படியே கிறிஸ்துவும் பாவிகளுக்காக தன் ரத்தத்தை சிந்தினார். எபிரேய கிறிஸ்தவர்கள் சகிக்க முடியாத தொல்லைகளுக்கு ஆளாக்கப் பட்டிருப்பார்கள். இருப்பினும், ஒருவேளை மரணத்தோடு போராடியிருக்க மாட்டார்கள். கிறிஸ்தவர்களுக்கு எதிராக, எருசலேமிலும், தமஸ்குவிலும் மற்ற அனேக இடங்களிலும் கொடுமையும், வன்முறை செயல்களும் ஆரம்பமாயின. அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கு நேர்ந்த துன்பங்களை, கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம் 11-ம் அதிகாரத்தில் தெளிவாக விளக்குகின்றார். அப்போதைய நிலையில் எபிரேய கிறிஸ்தவர்கள் என்ன துன்பப்பட்டார்களோ, இதை கிறிஸ்துவும் மற்றவர்களும் பட்ட துன்பத்துடன் ஒப்பிடமுடியாது. இருப்பினும் பாவத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்கும் பொழுது, துன்பங்கள் வந்திருக்கும். "அன்றியும் என் மகனே கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே" என்றார் (வசனம்-5). கிறிஸ்தவ ஜீவியத்தை துவக்கிய அனேகர், பாதியிலே நின்றுவிடுகின்றனர். ஆரம்பம் நன்றாக இருந்தாலும், வழியிலே பெலனற்று ஒடிந்து விடுகின்றனர். ஓட்டம் முடிவு வரை செல்லுவதில்லை.

ஒரு நல்ல தகப்பன் தன் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பில், அதுவும் சரியான பாதைகளில் நடத்தி செல்லும் பணியில், அவர்களை சிட்சிக்காமல் இருக்க மாட்டான். குமாரர்கள் குடும்ப வாரிசு. குடும்பத்தின் கௌரவம் அவர்கள் நடத்தையைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, தன் குமாரன் மீது அன்பு வைத்திருக்கும் எந்த தகப்பனும் அவனை சீர்திருத்தாமல் விடமாட்டான். ஆகவே, 'சிட்சை' அவசியம். நாகரீக மோகத்தில் சென்று கொண்டிருக்கும் இந்த உலகத்தில், இதைப்பற்றி கவலைப்படுபவர்கள் யாரும் இல்லை ஏதோ பெற்ற கடமைக்கு உணவு, உடை, மீறினால் படிப்பு இவற்றை கொடுத்து விட்டு, காலா காலத்தில் ஒரு கலியாணத்தை பண்ணி அவர்களை எங்கேயாவது ஓட்டி விட்டால் போதும் என்று எண்ணுகின்றனர், தற்போதைய தகப்பன்மார்கள். தங்கள் பிள்ளைகளை சிட்சித்து சீர்திருத்தி வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதில்லை. பிள்ளைகளும் பெற்றோருக்கு கீழ்படியாமல், முரட்டாட்டம்

செய்கின்றவர்களாகவே இருக்கின்றனர், தன் பிள்ளைகளை, நல்லொழுக்கத்தில் கொண்டு வர, அவர்களை சிட்சியாத தகப்பன் அவர்கள் மீது அன்பு செலுத்தவில்லை என்றுதான் பொருள்.

எபிரேய ஆசிரியர் கிறிஸ்தவர்கள் தேவனுடைய புத்திரர் என்கிறார். தேவன் அவர்களை சிட்சிக்கிறார் என்கிறார். அதையே சாலமோனும், "என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவர் கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாதே தகப்பன் தான் நேசிக்கிற புத்திரர்களை சிட்சிக்கிறது போல, கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார் என்றார். தேவனுடைய புத்திரர் என்னப்படுவது உலகில் யாருக்கும் கிடைக்காத அற்புதமான சிலாக்கியம். பொறுப்போடு பிள்ளைகளை சிட்சிப்பதில் வரும் சந்தோஷத்தை சுட்டிகாட்டும் போது ஞானி சாலமோன், "உன் மகனை சிட்சை செய், அவன் உனக்கு ஆறுதல் செய்வான். உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்" என்றார்.

எந்த சிட்சையும், தற்காலத்தில் சந்தோஷமாயிருக்காது. ஆனால் ஏற்ற காலத்தில் அது பலனை கொடுக்கும். வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ளும் முதல் பாடம், எந்த காரியத்தை செய்தாலும் நாம் இன்று அனுபவிக்கும் சந்தோஷம், ஆரம்பகாலத்தில் நாம் பட்ட கஷ்டங்களும், தியாகங்களின் பிரதிபலன் தானே.

தேவனுடைய படைப்பிலே அதிக உஷ்ணமும் கேடு விளைவிக்கிறது அதிக குளிரும் உடம்பை பாதிக்கிறது. இருள் இல்லாத ஜீவியத்தை எதிர்பார்க்கமுடியாது, வெளிச்சமும், இருளும் மாறி மாறி வருகிறதே பகல் இரவைப்போல, துன்பமும், இன்பமும் மாறி மாறி வருவதும் இயற்கையே. எபிரேய ஆசிரியர், "கர்த்தர் தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" என்கிறார். கிறிஸ்தவனுடைய வாழ்க்கைபாதை மென்மையான ரோஜாப்பூ இதழ்களால் ஆனதல்ல. சில சமயம் கரடு முரடான பாதையில் செல்ல வேண்டிவரும். உலக பிரகாரமான எத்தனையோ சாதனைகளில் இந்த உண்மையை உணர்ந்து, பல பாடுபட்டு, சிட்சிக்கப்பட்டு முடிவில் தங்கள் குறிக்கோளை அடைகின்றார்கள். பரலோக பாதையை மாத்திரம், கண் இமைக்கும் நேரத்தில் எந்தவித முயற்சி இல்லாமல், சிட்சையையும் சகிக்காமல் எளிதில் கடந்து விடமுடியுமா? "பிரம்பை கையாடாதவன் தன் மகனை பகைக்கிறான்" என்றார் ஞானி. மேலும் பிள்ளையை தண்டியாமல் விடாதே, அவனை பிரம்பினால் அடித்தால் அவன் சாகான் என்றார். (அதற்காக சாகும் வரை அடித்து கொண்டு இருக்க மாட்டீர்கள் அல்லவா!) மேலும் நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவை தப்புவிப்பாயே என்கிறார்.

தொடரும்......

# எதிரிகளுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுக்க சொன்ன எலிசா

*வேதப்பகுதி: 2இராஜாக்கள்6:9-23(சிறுவர் பகுதி)*



இஸ்ரவேலின் ராஜாவுக்கு எலிசா தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டு வந்தான். இதனால் இஸ்ரவேலின் ராஜா மிகவும் எச்சரிக்கையாயிருந்தான். இந்தக் காரியத்தினிமித்தம் சீரியராஜாவின் இருதயம் குழம்பி, அவன் தன் ஊழியக்காரரை அழைத்து நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார் என்று நீங்கள் எனக்கு அறிவிக்கமாட்டீர்களா என்று கேட்டான். அதற்கு அவன் ஊழியக்காரரில் ஒருவன் அப்படியில்லை; என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான். அப்படியானால் அவனைப் பிடிக்கும்படி நீங்கள் போய் அவன் எங்கே இருக்கிறான் என்று பாருங்கள் என்றான்.

அந்தப்படியே இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான்; அவர்கள் இராக்காலத்திலே வந்து பட்டணத்தை வளைந்து கொண்டார்கள். எலிசாவின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில் இதோ, இராணுவமும் குதிரைகளும் பட்டணத்தைச் சுற்றி இருக்கக் கண்டு ஐயோ, என் ஆண்டவனே என்ன செய்வோம் என்றான். அதற்கு எலிசா என்ன சொன்னான் தெரியுமா? பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். உடனே எலிசா விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான். உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்.

பின்பு சீரிய இராணுவம் அவனிடத்தில் வருகையில், எலிசா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி; இந்த ஜனங்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்யும் என்றான்; எலிசாவுடைய வார்த்தையின்படியே அவர்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்தார். அப்பொழுது எலிசா அவர்களை பார்த்து: இது வழி அல்ல இது பட்டணமும் அல்ல; என் பிறகே வாருங்கள் நீங்கள் தேடுகிற மனுஷனிடத்தில் உங்களை அழைத்துச் செல்வேன் என்று சொல்லி சமாரியாவுக்கு அழைத்து சென்று பின்பு கர்த்தரை நோக்கி ஜெபித்து இவர்கள் பார்க்கும்படி செய்யும் என்றான். அப்படியே அவர்கள் பார்த்து சமாரியா என்று கண்டார்கள். இஸ்ரவேலின் ராஜா உடனே இவர்களை வெட்டிபோடலாமா என்று கேட்டான். அதற்கு எலிசா நீ வெட்டவேண்டாம். இவர்கள் புசித்து குடிக்க அப்பமும் தண்ணீரும் வையும் என்றான். அந்தப்படியே பெரிய விருந்து அவர்களுக்கு பண்ணி அவர்கள் புசித்துக் குடித்த பின்பு அவர்களை தங்கள் ஆண்டவனிடத்திற்குப்போகும் படி அனுப்பி விட்டார்கள். அதன் பின்பு சீரியரின் தண்டுகள் இஸ்ரவேலின் தேசத்திலே அப்புறம் வரவில்லை.

நாமும் நமக்கெதிராக வரும் சத்துருக்களை சபிக்காமலும் அவர்களை அழிக்காமலும் எலிசாவைப்போல அவர்களுக்கு ஆகாரம்கொடுத்து அனுப்புவோம்.

***மனப்பாட வசனம் : "...உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனம் கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்" (ரோமர் 12:20)***

பாடம் - 2

# சபையின் வருகை
# THE COMING OF THE CHURCH

J.C.Choate

சபையானது திடீரென ஒரு இராத்திரியிலே வந்து விடவில்லை. அது திட்டமிடப்பட்டு, தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு, வாக்குத்தத்தம் செய்யப்பட்டு, பிறகு ஸ்தாபிக்கப்பட்டது. வேதாகமம் இவையனைத்தையும் தெளிவாகக் காட்டுகிறது.

முதலாவதாக, சபை தேவனுடைய மனதிலே இருந்தது. இதைப் பவுல் , எபேசு பட்டணத்து பரிசுத்தவான்களுக்கு விளக்கப்படுத்துகிறார். அவர், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய ... தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்"(எபே.1:3-6). என்கிறார். எபேசு பட்டணத்துச் சபைக்கு அவர் பேசுகிறார் என்பதையும், உலகத்தோற்றத்துக்கு முன்னே அவர்களை தேவன் தெரிந்து கொண்டார் என்பதையும் குறிப்பிடுகிறார். உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே தேவன் சபையைக் குறித்து எண்ணிக் கொண்டிருந்தார் என்பது இதன் பொருள். அதாவது தேவன் இதை அப்பொழுது திட்டமிட்டுக் கொண்டிருந்தார் ஆதலால் தேவனுடைய மனதில் அது இருந்தது. எனவே தேவன் ஆதியிலிருந்தே தமது மனதில் திட்டமிட்ட காரியத்தை ஒரு அசட்டையாக, அற்பமாக,மதிப்புக் குறைவாக எப்படி எண்ண இயலும்?

இரண்டாவதாக, சபையானது அநேக நிகழ்ச்சிகளில் தீர்க்கதரிசனமாகப் பேசப்பட்டது. "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள்" என்று ஏசாயா சொன்னார்(ஏசா.2:2). யோவேல் "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்: அப்பொழுது உங்கள் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள், ஊழியக்காரர் மேலும் ,ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன்" என்று சொன்னார் (யோவேல்2:28,29). பின்பு தானியேல் குறிப்பிடும்போது, அந்த இராஜாக்களின் நாட்களிலே. பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த இராஜ்யம் வேறே

ஜனத்துக்குவிடப்படுவதில்லை: ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி தானோ என்றென்றைக்கும் நிற்கும்" என்றார்(தானி.2.44). இப்பொழுது மேற்குறிப்பிட்டவைகளிலிருந்து சில முடிவுகளுக்கு வருவோமாக.

1. இராஜ்யம் கடைசி நாட்களில் ஸ்தாபிக்கப்படும்.
2. அது மலைகளிலே ஸ்தாபிக்கப்படும்.
3. எல்லா ஜாதிகளும் (தேசங்களும்) அதற்கு ஒடிவருவார்கள்.
4. கர்த்தர் தமது ஆவியை மாம்சமான யாவர்மேலும் ஊற்றுவார்.
5. உலகின் நான்காவது சாம்ராஜ்யத்தின் காலத்தில் அது ஸ்தாபிக்கப்படும்.
6. மற்ற இராஜ்யங்களை அது அழித்து தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

இவைகள் அனைத்தும் எங்கே நிறைவேறிற்று? அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தை வாசியுங்கள்.

மூன்றாவதாக: சபை வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. யோவான், அது சமீபித்து இருப்பதாகக் கூறினார்(யோவா.3:2). இதன் பொருள், விரைவாக அல்லது சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படும், கிறிஸ்துவும், "நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்.16:18). அன்றியும் அவர் அவர்களை நோக்கி; "இங்கே நிற்பவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்(மாற்.9:1). " எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும், எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" (லூக்.24:46-49). இப்பொழுது கீழ்வருவனவற்றை கூர்ந்து கவனிக்கவும்:

1. இராஜ்யம் சமீபித்திருந்தது.
2. கிறிஸ்து தமது மரணத்துக்குப்பின் ஸ்தாபிப்பதாக வாக்குத்தத்தம் செய்தார்.
3. கிறிஸ்துவோடு இருந்தவர்கள், அதன் ஸ்தாபிதத்தின்போது, உயிரோடிருப்பார்கள்.
4. அது பெலத்தோடே வரும்.
5. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்படும்.
6. அது எருசலேமிலே ஆரம்பமாகும்.
7. அப்போஸ்தலர்கள் உன்னதத்திலிருந்து வரும்பெலனால் தரிப்பிக்கப்படுவார்கள்.

தயவு செய்து மேற்குறித்த அனைத்தையும் மனதில் இருத்திக் கொள்ளுங்கள். இறுதியில் சபை ஸ்தாபிக்கப்படுதலையும், அப்பொழுது அவைகள் அனைத்தும் நிறைவேறுதலையும் காண்பீர்கள்.

இப்பொழுது அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திற்குத் திருப்புங்கள். இதை பலமுறை வாசித்துப் பாருங்கள் எல்லா வேதாகம நிபுணர்களுமே, சபை இந்நேரத்தில் ஸ்தாபிதம் பெற்றது என்பதை ஒப்புக் கொள்கின்றனர். மேலும் எருசலேம் என்னுமிடத்தில், கடைசி நாட்கள் என்னும் காலத்தில், ரோம சக்கரவர்த்திகளின் நாட்களில் பெலன் வந்தது, மனந்திரும்புதலும், பாவ மன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட்டது. அதிலிருந்து சபை தொடர்ந்து இருக்கிறது. எனவே, தேவன் தமது மனதில் எண்ணியிருந்த சபை ஸ்தாபிக்கப்பட்டது. அதைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின, அதைக் குறித்த வாக்குத்தத்தங்களும் பூர்த்தி செய்யப்பட்டன.

## பாடம் -2

## கேள்விகள்

**தயவு செய்து சரியான பதிலைக் குறிப்பிடுக:**

1. சபை முதலாவதாக எங்கே இருந்தது?
   -------
2. தேவன் எப்போது சபையைத் தேர்ந்தெடுத்தார்?
   -------
3. இராஜ்யத்தின் வருகையை முன்னறிவித்த மூன்று தீர்க்கதரிசிகளைக் குறிப்பிடுக?
   -------
4. இராஜ்யம் எவ்வளவு காலம் நிலைத்திருக்கும்?
   -------
5. சபையை ஸ்தாபிதன் செய்வதாக வாக்குத்தத்தம் செய்தது யார்?
   -------
6. அவர் யாருடைய சபையை ஸ்தாபிப்பதாக வாக்குத்தத்தம் செய்தார்?
   -------
7. எத்தனை சபைகளைக் கட்டுவதாகச் சென்னார்?
   -------
8. சபை எதன் உடன் வரவிருந்தது?
   -------
9. எருசலேமில் என்ன பிரசங்கிக்கப்படும் என்று கூறப்பட்டது?
   -------
10. சபையின் ஸ்தாபிதம் குறித்து எங்கே வாசிக்கிறோம்?
   ---------

தயவு செய்து **ஆம்** அல்லது **இல்லை** என்று குறிப்பிடுக:

1. சபை, திட்டமிடப்பட்டு தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு,

வாக்குத்தத்தம் செய்யப்பட்டு, பிறகு ஸ்தாபிக்கப்பட்டது.
------

2. சபையைக் குறித்த எண்ணம் தேவனுடைய மனதிலே உதயமாயிற்று
-----

3. இராஜ்யம் சமீபித்திருப்பதாக யோவான் கூறினான்
-------

4. இராஜ்யம் பலத்தோடே வரவேண்டும்
-------

5. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் அவருடைய நாமத்திலே சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும்.
------

6. சபை எருசலேமிலே ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது.
-----

7. அப்போஸ்தலர்2-ம் அதிகாரம் சபையின் ஸ்தாபிதம் பற்றிக் கூறுகிறது.
-----

8. இது ரோம இராஜாக்களின் காலத்தில் சம்பவிக்க வேண்டியிருந்தது.
----

9. கடைசி நாட்கள் என்பது ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது.
-----

10. தீர்க்கதரிசனங்களும், வாக்குத்தத்தங்களும் நிறைவேறிவிட்டன.

**தயவு செய்து பூர்த்தி செய்யுங்கள்:**


1. "அவர்------------------ கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே"
2. "------------------கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் ஸ்தாபிக்கப்படும்"
3. "என்றென்றைக்கும்-------------------இராஜ்யத்தை பரலோகத்தின் தேவன் ஸ்தாபித்தார்"
4. "நான் என் -------------------கட்டுவேன்"
5. "மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும்----------------தொடங்கி பிரசங்கிக்கப்பட வேண்டியது"

வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2தீமோ.3:16,17)

# ஆராதனைக்குச் செல்வது மிகச் சிரமமாயிருக்கிறது

# Going to Worship is Too Much Trouble

-Betty Burton Choate



ஜனங்கள் தங்களுடைய வயோதிப நாட்களில் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் எழுந்து வேலைக்குச் செல்லுகின்றனர். சிலர் வயல்களுக்கு அதிகதூரம் நடந்து செல்கின்றனர், மற்றவர்கள் - சைக்கிள், மோட்டார் ஸ்கூட்டர், பஸ் அல்லது தங்களுடைய சொந்த கார் போன்றவற்றில் தங்களுடைய வேலைக்கு சவாரி செய்யலாம் ஆனால் ஒருவருடைய வேலைஸ்தலத்திற்கு செல்ல எடுத்துக்கொள்ளும் சிரத்தை மிகப்பயங்கரமானதாக இருக்கலாம். என்றாலும், ஒருவன் வாழவேண்டு மென்றால், உணவு வாங்குவதற்கும் வாடகை செலுத்துவதற்கு அல்லது வீட்டிற்கு வாடகை செலுத்துவதற்கும், தன்னுடைய பொறுப்பைவகிப்பதற்கும் அதன்பின் சம்பளம் பெறுவதற்கும் ஒருவன் கட்டாயம் வேலை செய்தாக வேண்டும்.

மாறாக, ஒரு புதிய வாரத் துவக்கத்திற்கு அடையாளமாகவும், தம்முடைய ஜனங்கள் தம்மிடத்தில் நெருங்கி வந்து சேவிக்கவும் ஒருவருக்கொருவர் நெருக்கமாயிருக்கவும் தேவன் தம்க்கென்று ஒரு நாளை நியமித்திருக்கிறார். புதியஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் - நாம் ஞாயிறு என அழைக்கிற அந்நாளில் ஆராதிக்கும்படி கூடி வந்ததற்கான ஆதாரங்களையும், திருஷ்டாந்தங்களை நாம் கொண்டிருக்கிறோம்.

இருந்தபோதிலும், அசௌரியத்தோடும் ஆராதிக்கச் செல்லுமிடத் திற்கான செலவுகளினிமித்தமாகவும் தங்களை சிரமப்படுத்திக்கொள்ளுவது தேவையற்ற ஒன்று எனக் காண்கிற கிறிஸ்தவர்கள் உண்டு. சிலர், “நான் வீட்டிலே என்னுடைய ஜெபங்களை ஏறெடுத்துக் கொள்ளுவேன்” எனக் கூறி தங்களுடைய மனசாட்சியை சாந்தப்படுத்திக் கொள்கின்றனர். “ஆனால் வீட்டிலுள்ள என் வேலைகளைசெய்வதற்கும், மார்க்கெட் செல்வதற்கும் ஓய்வெடுப்பதற்கும் எனக்கு ஒரே ஒரு நாள் மட்டுமே இருக்கிறது” என்ற வேறு காரணமும் உண்டு. தொடர்ந்து மற்றவர்கள்

தாங்கள் ஆஜரர்காத காரணத்திற்கு "பிரசங்கியாருடைய பிரசங்கம் சுவாரஸ்யமில்லாதிருக்கிறது" எனக்கூறி சபை ஊழியரை குற்றப் படுத்துவார்கள். ஆராதனையில் நான் எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை- நான் வெறுமனே வீட்டிலே தங்கியிருப்பேன் எனக் கூறுகின்றனர்.

சிலருடைய குடும்பங்களில், கணவன் ஆராதனைக்குச் செல்லுவான், ஆனால் அவன் தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்வதின் அவசியத்தை உணருவதில்லை. குறிப்பாக தன்னோடு கூட்டிச்செல்லும்போது உண்மையாகவே இது ஒரு பிரச்சனையா? அவன் தான் மட்டும் இப்போது ஆராதனையில் கலந்து கொள்ளுவோம், பிள்ளைகள் பெரியவர்களாகும் போது செல்லலாம் எனக் கருதுகிறான்.

இந்த எல்லாவிதமான சாக்குப்போக்குகளும் இந்த மன நிலைகளும் எத்தனை தவறானது? தம்முடைய ஊழியம் முழுவதிலும் இயேசுவின் செய்தி "வாருங்கள் என்னைப்பின்பற்றுங்கள்" என்பதாகவே இருந்தது. அவர் ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு நபரைக் காட்டிலும் தமக்கே முதலிடம் கொடுக்குமாறு ஜனங்களைக் கேட்டுக்கொண்டார். மத்தேயு6:33ல் அவர் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்றார்.

நாம் எவ்விதமான "சிரமம்" அல்லது 'அசௌரிகம்' அல்லது "செலவு" போன்றவை அவரைப் பிரியப்படுத்தும்படிக்கு அவசியமானது என அவைகளைக்கடந்து செல்ல விருப்பமில்லாதவர்களாக இருந்தால் நாம் கிறிஸ்துவை முதலாவது தேட முடியாது அல்லது அவரைப்பின்பற்றவும் முடியாது.

எபிரெயர்10:25, "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல் நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்" என விளக்குகிறது.

"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக் கினையுமே இருக்கும்".

"மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே: தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த

உடன் படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்"

கிறிஸ்தவர் ஒருவருக்கொருவர் ஏன் கூடிவரவேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் பல உண்டு.

**தேவனை ஆராதிக்க.** எபிரெயர்12:24 சபை கூடிவருதலைப் பற்றி ஒரு அழகான சித்திரம் வரைகிறது. "நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர் களினிடத்திற்கும்.. பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப் பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ..... வந்து சேர்ந்தீர்கள்".

**கிறிஸ்துவின் தியாகத்தை நினைவு கூர.** அப்போஸ்தலர்20:7ல், பவுல் சபையோடு சேர்ந்து ஆராதிப்பதற்கு ஒரு வாரம் துரோவா பட்டணத்தில் தங்கியிருந்தான் என வேதவாக்கியம் கூறுகிறது: "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்".

**கூடி ஆராய்வதன் மூலம் தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொள்ள.** "....சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற வானாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிறதையாயிரு"(2தீமோ.2:15). ஏன்? ஏனென்றால், "வேதவாக்கியங் களெல்லாம் தேவ ஆவியினால் அருள்ப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதி யுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது"(2தீமோ.3:16,17).

**ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்ளுவதின் மூலம் பெலத்தைப் பெற்றுக் கொள்ள.** "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்"(மத்,18:20). எபிரெயர்10:24ன்படி நாம் ஒருவருக் கொருவர் அன்பிலும் நற்கிரியைகளிலும் உற்சாக மூட்டுகிறவர்களா யிருக்கிறோம். நாம் சகோதரரை ஒருபோதும் சந்திக்காதவர்களாகவும், அவர்கள் செய்கின்ற பணிகளில் பங்குகொள்ளாதவர்களாயிருப் போமானால், நாம் எவ்வாறு சகோதரரைஉற்சாகப்படுத்தி, பெலப்படுத்தக் கூடும்?

தேவனை ஆராதிக்கும்படிக்கு பரிசுத்தவான்களோடு கூடிவருவதை புறக்கணிக்கும் போது நம்முடைய வாழ்வில் சரியான சமநிலையைக் கொண்டிருக்க முடியாது ஒவ்வொரு சமயமும் ஒரு கிறிஸ்தவன் ஆராதனையைப் புறக்கணிப்பதையே தெரிவுசெய்கிறான், மேலும் அவன் தேவனையோ, ஆராதனையையோ சபையையோ தன் வாழ்வில் முதன்மையாக வைக்காத தன்னுடைய மாதிரியையே தன்னுடைய செல்வாக்கின் கீழ் இருப்பவர்களுக்கும் போதிக்கிறான். குறிப்பாக அவன் ஆராதனையிலும், வேதஆராய்ச்சியிலும், தேவனை அறியும் அறிவில் வளர்வதிலும் கலந்து கொள்ளாததின் மூலம் தன்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களை ஆபத்திற்குள்ளாக்குகிறான்.

ஒரு வளர்ந்த கிறிஸ்தவன் தன்னுடைய சரீரத்தில் ஆராதனைக்குச் செல்ல இயலாத சூழ்நிலையைத் தான் ஒருபோதும் சபை கூடி வருதலை இழந்துவிடக்கூடாது என தவிர வெகு காலத்திற்கு முன்னே தீர்மானித்து விடுகிறான். ஞாயிற்று கிழமையில் அவன் இவ்வினாவைப்பற்றிய எந்த ஒரு புதிய தீர்மானத்தையும் உருவாக்குகிறதில்லை; அவன் தான் தேவனுடைய ஜனத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிகிறான், அவன் தன்னுடைய சிருஷ்டிகரை துதித்து அவருடைய இரட்சிப்பின் மாபெரும் கிரயத்தை நினைவுகூருகின்றான். எனவே அவன் ஆராதிக்கும்படி சபை கூடிவரும்போது சபையோடு ஐக்கியம் கொண்டிருப்பான்.

நீங்கள் தேவன் அறிவுறுத்தியிருக்கிறபடி தேவனை ஆராதிப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றிய காரியத்தில் தவறான தீர்மானத்தை உருவாக்கியிருப்பீர்களானால், தயவு செய்து திரும்பச் சென்று ஜெபத்துடனே உங்களுடைய தெரிந்து கொள்ளுதலைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். இதுவே தவறான ஒன்றும், உங்களுடைய நித்திய ஆக்கினையில் முடிவுபெறக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது. உங்களுடைய இரட்சிப்பு மாபெரும் கிரயமாகிய தம்முடைய குமாரனின் மரணத்தில் தேவனால் நிறைவேற்றப்பட்டதாயிருக்கிறது.

**தமிழில் – குளோரி அர்ஜுனன்**


**கானாவூர் திருமணத் தகவல் மையம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
சகோ. ஆ. கனகராஜ்
"கானாவூர் திருமணத் தகவல் மையம்"
மதுரை தேசிய நெடுஞ்சாலை 45 A,
நாகமங்கலம், திருச்சி – 620 012 (போன்: 3129368, 95-431-2695414)

# கிறிஸ்துவின் அன்பிலே நிலைத்திருங்கள்

P.கந்தசாமி

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த சகோதரனே,சகோதரியே,அகில உலகத்தையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவன் எல்லாவற்றையும் ஆண்டுகொள்ளுவதற்கும், தம்மைத் தொழுது கொள்ளுகிறதற்கும், அவருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்றும் இவை எல்லாவற்றிக்கும் மேலாக தமது அளவில்லாத தயவினாலும் அன்பினாலும் மனுஷன் மேல் பிரியம் வைத்து, அவனை உண்டாக்கினார் (ஆதி.1:26-28).

எல்லாவற்றையும் படைத்து, தேவன் அவைகள் நல்லது என்று கண்டார் (ஆதி.1:31). இப்படி உண்டாக்கப்பட்ட மனுஷன், தேவனுக்கு விரோதமாக மேட்டிமை கொண்டு கீழ்ப்படியாமல் சாத்தானுக்கு செவிகொடுத்தான். சாத்தான் சர்ப்பத்தின் வடிவிலே தேவனுடைய மனிதர்களை வஞ்சகமான வார்த்தைகளினால் பாவம் செய்யப்பண்ணினான் (அதி.3:1).

தேவன் மனுஷனை செம்மையாக (பிர.7:29) உண்டாக்கினார். ஆனால் மனுஷனோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக்கொண்டான். தேவன் மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார் (ஆதி.6:5,6). இப்படி கீழ்ப்படியாத மனுஷன் ஏதேன் தோட்டத்தில் சாபத்தைப் பெற்று வெளியே துரத்தப்பட்டான்.

இப்படி வெளியேற்றப்பட்ட மனுஷனை தேவன் அப்படியே விட்டுவிடாமல், மனுக்குலம் முழுமையும் மறுபடியும் தம்முடைய அளவில்லா இரக்கத்தினாலும், அன்பினாலும், பாவங்களில் இருந்து இரட்சிக்க கர்த்தராகிய இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார் (யோவா.3:16). பாவமில்லாத அவரை நமக்காக பாவமாக்கினார் (2கொரி.5:21). நம்முடைய பாவங்களுக்காக, அக்கிரமங்களுக்காக,தேவசாயலாக இருந்த நமது ஆண்டவராகிய இயேசு மனுஷர் சாயலானார். மரணபரியந்தமும் தம்மைத் தாமே தாழ்த்தினார் (பிலி.2:6-8).

நமதாண்டவர் நமக்காக அநேக பாடுகளை பட்டு, ஒரே ஆவியினாலே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை உண்டுபண்ணினார் (எபே.2:12-18). இப்படியெல்லாம் கிறிஸ்துவின் அன்பைப் பெற்ற அநேகர் நாம் எப்படி இந்த ஸ்தானத்திற்கு (கிறிஸ்தவத்திற்கு) வந்தோம் என்பதை சீக்கிரமாய் மறந்து, 1தீமோத்தேயு3:1-ன்படி நல்ல வேலையை விரும்பி ஏற்றுக்கொண்டவர்கள் 1பேதுரு5:2,3-ன்படி வசனத்தை மறந்து, மறுபடியும் அகந்தையும், மனமேட்டிமையும் பெற்றுவிடுகின்றனர்.

யோவான் ஆசிரியர் கிறிஸ்துவின் அன்பைப் பற்றி ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார் இதைப்பற்றி சற்று தியானிப்போம். நியாயப்

பிரமாணத்தைமீறுவதே பாவம் (1யோவா.3:4).ஒளியில் இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனை பகைக்கிறவன் இருளில் இருக்கிறான் (1யோவா.2:9). சகோதரனிடத்தில் அன்பு கூறுகிறவன் ஒளியில் இருக்கிறான் தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரன் கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினாலே காயீன் ஆபேலைக் கொலை செய்தான் (1யோவா.2:10, 1யோவா.3:12, ஆதி.4:8,9).சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான் (1யோவா.3:14).மனுஷ கொலை பாதகனிடத்தில் நித்திய ஜீவன் நிலைத்திராது (1யோவா.3:15).சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் (1யோவா.3:16).ஆகையால் யாவரிடமும், பரிசுத்தராயிருக்கவும், சமாதானமாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லை (எபி.12:14).

முன்னே தூரமாயிருந்து,இரக்கம் இல்லாதவர்களாயிருந்த நாம் இப்போது கிறிஸ்து இயேசுவினாலே இரக்கத்தைப் பெற்று தேவனுடைய ஜனங்களாயிருக்கிறோம் (1பேது.2:10). இப்படி இரக்கத்தைப் பெற்ற நாம், வெளி.2:19,20-ன்படி குறைவில்லாமல் 2கொரி.13:11-ன்படி சந்தோஷம், நற்சீர்பொருந்தி,ஆறுதலடைந்து ஏகசிந்தையுடன் சமாதானமாயிருந்து தேவனுக்கேற்ற கிரியை நடப்பிப்போம். அப்பொழுது அன்புக்கும் சமாதானத்திற்கும் காரணராகிய தேவன் நம்மோடிருப்பாராக.

இப்படியே அன்பிலே நிலைத்திருந்து கிறிஸ்துவின் பிரமாணத்தைப் பின் பற்றி நடப்போமாக. ஆமென்.

## நாவு

- **ஆரோக்கியமுள்ள நாவு** ஜீவவிருட்சம்; நீதி.15:4
- **ஞானிகளின் நாவு** அறிவை உபயோகப்படுத்தும். நீதி.15:2
- **நீதிமானுடைய நாவு** சுத்தவெள்ளி. நீதி.10:20
- **மாறுபாடுள்ள நாவோ** அறுப்புண்டுபோம். நீதி.10:31
- **ஞானமுள்ளவர்களுடைய நாவோ** ஔஷதம். நீதி.12:18
- **பொய்நாவோ** ஒரு நிமிஷமாத்திரம் இருக்கும். நீதி.12:19
- **நாவின்** பிரதியுத்தரம் கர்த்தரால் வரும். நீதி.16:1
- மரணமும் ஜீவனும் **நாவின்** அதிகாரத்திலிருக்கும். நீதி18:21
- **இனிய நாவு** எலும்பையும் நொறுக்கும். நீதி.25:15
- **நாவு** யாவும் தேவனை அறிக்கைபண்ணும். ரோம.14:11
- **நாவும்** நெருப்புத்தான், அது அநீதி நிறைந்தஉலகம். யாக்.3:6
- **நாவை** அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. யாக்.3:8
- **என் நாவு** விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி. சங்.45:1
- நாள் தோறும் **என் நாவு** உமது நீதியைக் கொண்டாடும். சங்.91:24
- **என் நாவு** உம்முடைய வசனத்தை விவரித்துச் சொல்லும். சங்.119:172

## தெரிந்து கொள்ளுங்கள்

எகிப்து நாட்டில் பழங்காலத்தில் இறந்து போன மன்னர்களின் உடல்களைப் பதப்படுத்தி பாது காத்து வந்தனர். இது போல பதப்படுத்தப்பட்ட மனித உடல்களில் பல அங்கு கண்டு பிடிக்கப்பட்டன. பிரான்சு மற்றும் எகிப்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் நடத்திய ஆய்வில் 50 'மம்மி' களை கண்டுபிடித்தனர். கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய ஆயிரம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த இந்த மம்மிகள் கெய்ரோ அருகே சக்காரா என்ற இடத்தில் உள்ள சுரங்கத்தில் கண்டு எடுக்கப்பட்டன. இவை சணல் துணியால் சுற்றப்பட்டு கல்லால் அல்லது மரத்தாலான சவப்பெட்டியில் வைத்து மூடப்பட்டு இருந்தன.

### வேத அறிவுப் போட்டியாளர்களின் கவனத்திற்கு,

உங்களுடைய சுயமுற்சியில் கண்டுபிடியுங்கள். போஸ்ட் கார்டில் உள்ள கையெழுத்து ஒரே மாதிரியாக இருப்பதால் எங்களுக்கு மனவேதனையளிக்கிறது. ஒரே நபர் பலருக்கு எழுதியனுப்புகிறார் என அறிகிறோம். தயவு செய்து இம்முயற்சியை கைவிடவும். சுயமாக எழுத ஒவ்வொருவரையும் ஊக்குவியுங்கள். ஒருவேளை உங்களுடைய கையெழுத்து மோசமாக இருந்தாலும் பரவாயில்லை பயப்படாமல் எழுதி அனுப்புங்கள். நம் வயிற்றுக்கு நாம் தான் சாப்பிடவேண்டும். தயவு செய்து காப்பி அடிக்காதீர் கண்ணை உண்டாக்கினவர் காணாரோ?

ஆசிரியர்

### ஜெபியுங்கள்



☆ நம்முடைய மாத இதழின் ஆர்வமிக்க வாசகி T.கிரேஸ்பத்மாபாய் ஆசிரியை(ஓய்வு) அவர்கள் கடந்த 20.04.04 அன்று நித்திரையடைந்துவிட்டார்கள். சகோதரி அவர்கள் விட்டு சென்ற குடும்ப ஆறுதலுக்காக ....

☆ 14 வது வாசகர் கருத்தரங்கை நடத்த கிருபை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி ....

☆ நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்பு நல்ல ஆட்சி அமைய ....

பரிசுத்த வேதாகமத்தை முறையாக் கற்று நீங்கள் இரட்சிக்கப்பட அருமையான பாடத்திட்டம் . இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து படிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

சேர்க்கைக் கட்டணம் : ரூ.30 ( தபால் செலவுக்காக )

வயது : 20 க்கு மேல்

ஆண்டுகள் : இரண்டுவருடம்

பாடத்திட்டம் : ஆறு பகுதிகள்

ஆறு பகுதிகளை முடிப்பவர்களுக்கு இறுதிச் சான்றிதழ் **MASTER COURSE CERTIFICATE** வழங்கப்படும். இன்றே ரூபாய் 30 செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள் . இப்பாடத்திட்டம் உங்கள் வீடுதேடி வரும்.

உங்கள் முகவரியை ஆங்கிலத்தில் மாவட்டம்,

பின்கோடு உள்பட தெளிவாக எழுதி அனுப்பவும்.

BATLAGUNDU BIBLE COLLEGE
POST BOX NO.5
BATLAGUNDU - 624 202

## வேதஅறிவுப்போட்டி எண் 44-ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. வேசிப்பணையமாய்ப் | - மீகா.1:7 | 6. அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான் | - ரோ.14:18 |
| 2. அறாது | - பிர.4:12 | 7. பவுல் | - கலா.1:10 |
| 3. கர்த்தருடைய | - சங்.89:14 | 8. கிறிஸ்து | - 1பேது.2:21 |
| 4. பிதாக்களால் | - யோவா.7:22 | 9. பட்டமரத்தைப்போல | - யோபு24:20 |
| 5. புபிலியு | - அப்.28:7 | 10. மோசே | - யாத்.18:24 |

## வேதஅறிவுப்போட்டி எண் 44ல்வெற்றிபெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P. அலிஸ்மேரியம்மாள் | வத்தலக்குண்டு | Mrs.வனிதா சாமுவேல் | மதுரை |
| S. தண்டபாணி | சிலுவத்தூர் | Mrs. ஜாஸ்மின் வின்செண்ட்ராஜ் | மதுரை |
| K. பிரஜிதா | ஈரோடு | A. சேவியர்மேரி | மதுரை |
| P.S. லலிதாபிரேமகுமாரி | மதுரை | R. பாரதி | கோபி |
| G. மெர்சி ரூபி | கொடுவாய் | N. கமலவேணி | சென்னை |
| T.வேலுச்சாமி | ஜேடார்பாளையம் | V. செல்வகுமார் | கரசப்பட்டி |
| R. செந்தில்குமார் | திடுமல் | M. ரோஸ்மேரி | சென்னை |
| IRA. எதிராசன் | சங்ககிரி | S.R. பெரியசாமி | சேளுர் |
| G.P. ஏசையன்ராஜ் | கோபி | Sis. சுசிலா | கோபி |
| S. நிர்மலாதேவி | கொடைக்கானல் | P. கந்தசாமி | கீரனூர் |
| S. சிங்காரவேலு | மதுரை | M. பிலிப் | செ.பா. |
| R. ரூத் | மதுரை | J. வாசுகி | செ.பா. |
| Dr. ஜெயசிங் | ராயபுரம் | M. சரண்யா | செ.பா. |
| A. கந்தசாமி | தெக்கலூர் | D. சுரேஷ் | செ.பா. |
| R. சாமுவேல் | ஊதியூர் | P. சாலமோன் | செ.பா. |
| J.S. நிர்மலாஜான் | மதுரை | N. ஜான் | செ.பா. |
| G. கிரேஸ் ஜெயா | வெள்ளக்குளம் | T. அன்னாள் | செ.பா. |
| S. ஆனந்தராஜ் | ஈரோடு | Sis. செல்விபூமணியன் | செ.பா. |
| V. ரத்னா | எம். ஜி.பாளையம் | S. ஜெயராணி | செ.பா. |
| Mrs. ராஜேஸ்வரி | ராக்கியவலசு | Mrs. எஸ்தர்சேகர் | கோபி |
| K. சாந்தி | எம். வாடிப்பட்டி | | |
| V. கோவலன் | மதுரை | | |

### *ஒரு வாசகரின் கடிதம் .......*

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான சகோதரர் அர்ஜுனன் அவர்களுக்கும், சகோதரி குளோரி அர்ஜுனன் அவர்களுக்கும் இறைமகன் இயேசுவின் நாமத்தினால் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்ட வருடங்களுக்கு பின்பு கடிதம் எழுதுகிறேன். கடிதம் எழுதாதற்கு மன்னிக்கவும். என்னால் தொடர்ந்து ஊழியத்தை செய்ய முடியவில்லை என்னுடைய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள பொருளாதாரம் என்னிடமில்லை. வேலை செய்து கொண்டு ஊழியம் செய்யலாம் என்று வேலைதேடினால் அதனால் மனவருத்தமும், சஞ்சலமுமே ஒருவேளை உணவுக்கே மிகவும் திண்டாட்டமாக உள்ளது. தேவன் என்னை எதற்காக அழைத்தாரோ அதற்காக பொறுமையோடும், அமைதியோடும் ஜெபித்து வருகிறேன். நான் நம்பி இருந்தவர்கள் இப்போது கைவிட்ட நிலையில் இருக்க இடமின்றி அலைந்து திரிந்து வருகிறேன். தங்களுடைய மாதஇதழ் அடியேனுடைய ஒரு வழிகாட்டியாக இருப்பது என் துக்கத்திலும் ஆறுதலாயிருக்கிறது.

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த கடிதத்திலோ அல்லது நேரிலோ சந்திப்போம். தேவன் நம்மோடிருந்து ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

இயேசுவின் நேசன்
சகோ.பாலகிருஷ்ணன்

# சந்திப்போம்! சிந்திப்போம்!

D.எபிநேசர்

**உரையாடல் - 21**

தாவீது : பாவம் செய்தவர்கள் பரலோகம் போக முடியுமா யோனத்தான்?

யோனத்தான் : அதெப்படி? நிச்சயமாகப் போக முடியாது.

தாவீது : அப்படியானால் பாவமறியாதவர்கள் பரலோகம் போக முடியும் அல்லவா?

யோனத்தான் : போக முடியும் என்றுதான் நினைக்கிறேன்.

தாவீது : சரி குழந்தைகளை பாவிகள் என்று சொல்லலாமா?

யோனத்தான் : நல்லது கெட்டது தெரிகிறவரை அவர்களை பாவிகள் என்று எப்படிச்சொல்ல முடியும்?

தாவீது : அப்படியானால் குழந்தைகள் பரலோகம் போவது உறுதியல்லவா? ஆண்டவரும் மத்19:14-ல் அதை உறுதிப்படுத்துகிறார். அது மட்டுமல்ல, குழந்தைப் பருவத்திலிருந்தே மனநிலை சரியில்லாதவர்களையும் தேவன் பரலோகத்திற்கு சேர்த்துக் கொள்வார்.

யோனத்தான் : எந்த மதத்தைச் சேர்ந்த குழந்தைகளாக இருந்தாலும் அந்த பாக்கியம் கிடைக்குமா?

தாவீது : ஆம் யோனத்தான்: எந்தக் குழந்தைகளாக இருந்தாலும் அவருக்கு பட்சபாதமில்லை. அவர்களும் பாவமறியாதவர்கள்தானே!

யோனத்தான் : மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது தாவீது! மோசே பிறந்தபோதும் இயேசு கிறிஸ்து பிறந்த போதும் அந்நாட்டு கொடுங்கோல் மன்னர்களால் ஏராளமான குழந்தைகள் கொல்லப்பட்டபோது தேவன் இரக்கமற்றவராக பார்த்துக் கொண்டிருந்தாரோ என்று நினைத்திருந்தேன். ஆனால் அவர்கள் பரலோகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற செய்தி எனக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுக்கிறது. நல்லது தாவீது! குழந்தையில் எடுத்த ஞானஸ்நானம் செல்லாது என்பதையும், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்டேன். இப்போது ஞானஸ்நானம் எடுத்துக் கொள்வதற்கு நான் ரெடி. ஆனால் ஒரு கன்டிஷன்.

தாவீது : கன்டிஷனா?

யோனத்தான் : ஆமாம். அது என்ன என்பதை நமது அடுத்த சந்திப்பில் சொல்கிறேன்.

(மீண்டும் சந்திப்போம் )

**ஆன்மீக ஆலோசனை**

“நீ தேவாலயத்துக்குப்போகும் போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம்”(பிர.5:1)

| நாகூம் | பழைய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | NAHUM |
|---|---|---|

**பொருள்** : யூதாவுக்கான ஆறுதல் மற்றும் நினிவேயின் யுத்த மனப்பான்மைக்கான நியாயத்தீர்ப்பு

**ஆக்கியோன்** : நாகூம்

**காலம்** : ஏறக்குறைய கி.மு.660-630

**திட்டவரைக் குறிப்பு** :
★ நீதியை சரிகட்டுகிற தேவன் தம்முடைய ஜனங்களுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார் (1:1-11)

★ கர்த்தர் சத்துருக்களைத் தோற்கடித்து தம்முடைய ஜனங்களுக்கு நம்பிக்கையளிக்கிறார் (1:12-15)

★ சத்துருக்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தம்மேல் வருவதைத் தவிர்க்க முடியாது (2:1-3:19)

**சிறப்புச் செய்தி :**

"கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளில் அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். ஆனாலும் நினிவேயின் ஸ்தானத்தை, புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம் பண்ணுவார், இருள் அவர் சத்துருக்களைப் பின்தொடரும்".

**வரலாற்று பின்னணி :**

நினிவேயின் முற்றுகையையும் மற்றும் கொடிய அநீதியினாலும், பெருமையினாலும் ஏற்பட்ட அழிவையும் குறித்து எச்சரித்தல்.

**"உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்" (சங்.119:97)**

**மருத்துவ ஆலோசனை**

"பகையோடிருக்கும் கொழுத்த எருதின் கறியைப்பார்க்கிலும், சிநேகத்தோடிருக்கும் இலைக்கறியே நல்லது" (நீதி.15:17)

**சீர்தூக்கிப் பார்** **"கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்" ( நீதி.16 : 2 )**



"கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே; தராசிலே வைக்கப்பட்டால் அவர்களெல்லாரும் மாயையிலும் லேசானவர்கள்" ( சங்.62:9 )

# வேத அறிவுப் போட்டி எண்.45

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.

1. விலையின்றி விற்கப்பட்டீர்கள், எதுவுமின்றி மீட்கப்படுவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
2. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் யாரை அழைத்திருக்கிறார்?
3. இதோ, அவர் இடித்தால் என்ன செய்ய முடியாது; அவர் மனுஷனை அடைத்தால் என்ன செய்யமுடியாது?
4. உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தை எவ்விதமாயும், எவ்விதமாயும் ஆண்டு கொள்ளும்படி அறிந்து கொள்ளவேண்டும்?
5. சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் எப்படிப்பட்டவைகள்?
6. உங்கள் அன்பு எப்படியிருப்பதாக?
7. யூதாவைச் சீர்குலைத்து, கர்த்தருக்கு விரோதமாய் மிகவும் துரோகம் பண்ணின ராஜா யார்?
8. தாவீது ஒரு தீர்க்கதரிசியா?
9. எவனுடைய இருதயம் அவனுக்குள்ளே செத்து அவன் கல்லைப் போலானான்?
10. உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் எப்படிப்பட்டவர்?

## நடப்புச் செய்திகள்

- மாம்பழம், வாழைப்பழம் உற்பத்தியில் 2002-2003-ஆம் ஆண்டில் இந்தியா உலக அள்வில் முதல் இடத்தை பிடித்துள்ளது.
- அட்சய திருதியை நாளான அன்று டெல்லியிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் ஒரே நாளில் சுமார் 17 ஆயிரம் ஜோடிகளுக்கு திருமணம் நடை பெற்றது.
- இந்திய ராணுவத்தில் மத போதகர் பணிக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளதாக தேனி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குனர் மாதவன் தெரிவித்து உள்ளார்.
- ஒலியைவிட அதிவேகமாகச் செல்லும் 'கன்கார்டு' விமானம், பயணிகள் போக்குவரத்தில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதால் அது ஸ்காட்லாந்து அருங்காட்சியகத்தில் வைக்கப்பட இருக்கிறது.
- இந்தியா - பாகிஸ்தான் -6அணிகள் பங்கேற்கும் ஆசியகோப்பை கிரிக்கெட்போட்டி வருகிற ஜீலை மாதம் இலங்கையில் நடக்கவிருக்கிறது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th May 2004.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்,




**கிறிஸ்துவின் சபை**

17.2.102-D/5, ராஜன் நகர், வத்தலக்குண்டு–624 202
திண்டுக்கல் Dt. ✆ : (04543) 263278

குப்பம்மாள்பட்டி – 624 212. கொடைக்கானல் T.K., திண்டுக்கல் Dt.

7, ஆதிவீராச்சாமி நாயக்கர் சந்து, அரண்மனை தெரு, வடகரை
பெரியகுளம்–626 501, தேனி மாவட்டம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.